

கோவை கோட்டை மேடு பள்ளிவாசல்களில் தொழுகை முடித்து வெளியே வந்த இஸ்லாமியர்களிடம் இந்தியா கூட்டணியின் கோவை நாடாளுமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கணபதி பா.ராஜ்குமார் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இதில் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக், கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு அணி மாநில செயலாளர் சுபேர்கான்,பகுதிக்கழக செயலாளர் வி.ஐ.பதுருதீன்,வட்டக்கழக செயலாளர்கள் அப்பாஸ்,நா.தங்கவேலன், மு.சித்திக், சாஜகான், சாஜகான்,லேனா நிஷார், வி.பி.முபஷிரா, லேனா ரஹீம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

## ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம்
## ஊத்தங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம், ஊத்தங்கரை பேரூர்ச் செயலாளர் இரா.பாபு சிவகுமார் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர்.பி.பார்த்திபன்**, (ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் ஊத்தங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29-03-2024

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

(திருத்தப்பட்டது)

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 01.04.2024 (திங்கட் கிழமை) | கன்னியாகுமரி<br>திருநெல்வேலி |
| 02.04.2024 (செவ்வாய் கிழமை) | திருநெல்வேலி<br>தென்காசி |
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

அண்ணாமலை கனவு காணலாம் - ஆனால்

# கோவையில் கழக வேட்பாளர் வெற்றி உறுதி!

## கனிமொழி கருணாநிதி திட்டவட்டம்!

கோவை, மார்ச் 31-

கோவையில் அண்ணாமலை கனவு காணலாம் அது அவரது உரிமை, ஆனால் நிச்சியமாக வெற்றி எங்களுடையது என கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டார்.

கோவை நாடாளுமன்ற வேட்பாளர் கணபதி ராஜ்குமார் ஆதரித்துத் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு வரும், திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கோவையில் அவிநாசி சாலையில் உள்ள தனியார் விடுதியில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

திமுக கூட்டணி வேட்பாளர் கணபதி ராஜ்குமார் கோவையில் நிச்சயமாக வெற்றி பெறுவார் என்பது பிரச்சாரத்தில் தெரிகிறது எனவும் இரண்டாவது இடத்திற்குத் தான் போட்டி இருக்கும் என்பதும் தெளிவாகியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த மூன்றாண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களுக்குச் செய்திருக்கின்ற திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குச் சென்றிருக்கிறது என்பதால் திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியில் இருக்கும் இந்தியா கூட்டணி ஒன்றியத்தில் உருவாக்க வேண்டும் பாஜக மீண்டும் எந்த பொறுப்புக்கும் வந்துவிடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்றும் கூறினார்.

நிச்சயமாக இந்த கூட்டணி இங்கு மட்டுமின்றி தமிழகத்தில் போட்டியிடும் 40 இடங்களிலும் தெள்ளத் தெளிவாக இருக்கிறது எனக் குறிப்பிட்ட அவர், ஆயுஷ்மான் திட்டத்தில் ஒன்றிய அரசு ஒரே பெயரில் 10 லட்சம் பயனாளிகளை இணைத்திருப்பதைப் போல் எங்களுக்கு தெரியாது என்றும் மகளிர் உதவித் தொகையை ஒரு கோடியே 15 லட்சம் பெண்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் அந்த திட்டம் மக்களைச் சென்று சேர்ந்திருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேபோல் காலை உணவுத் திட்டம் மக்களுக்குப் பெரிய அளவில் சென்று இருக்கிறது என்றும் கூறினார்.மேலும் தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்திருப்பதாகக் கூறிய அண்ணாமலையின் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்குப் பதிலளித்த கனிமொழி,போதைப்பொருள் தடுப்பு துறை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அதற்கு ஒன்றிய உள்துறை அமைச்சரகம் தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு உதவுவதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

குஜராத்தில் தான் பல லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அந்த துறைமுகம் யாருடையது என்பது அனைவருக்கும் தெரியும் என்றும் குறிப்பிட்டார்.

இதைப்போல் கோவையில் பாஜக 60 சதவிகித வாக்குகள் பெற்று மிகப் பெரிய வெற்றியைப் பெறும் என்ற அண்ணாமலையின் கருத்து குறித்த கேள்விக்குப் பதில் அளித்த அவர் 60 வாங்கலாம் 90% கூட வாங்கலாம் எனவும் கனவு காண்பது அவரது உரிமை ஆனால் வெற்றி நிச்சயமாக எங்களது தான் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரு பைசா கூட ஓட்டுக்குச் செலவழிக்க மாட்டேன் என்று அண்ணாமலை கூறுகிறார் பின்னர் எதற்காக அவ்வளவு கோடிக்குத் தேர்தல் பத்திரங்கள் வாங்கினார்கள் என்றும் அவர் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் நாங்கள் யாருக்கும் காசு கொடுத்து ஓட்டு வாங்க வேண்டிய அவசியம் கிடையாது.

முதலமைச்சர் திட்டங்களை நம்பித்தான் இங்கே வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்றார் கனிமொழி கருணாநிதி.

# தி.மு.க.வை எதிர்க்கும் வலுவை அ.தி.மு.க. இழந்து உள்ளது!

## உளுந்தூர்பேட்டை தேர்தல் பிரச்சாரத்தில் தொல்.திருமாவளவன் பேச்சு!



கள்ளக்குறிச்சி. மார்ச் 31-

இந்தியா கூட்டணி கட்சி விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வி.சி.க. வேட்பாளர் துரை.ரவிக்குமாரை ஆதரித்து உளுந்தூர் பேட்டை பேருந்து நிலையம் அருகில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் பரப்புரை மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இடம் பெற்றுள்ள வி.சி.க. சிதம்பரம் (தனி) மற்றும் விழுப்புரம் (தனி) ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிடுகின்றனர், இந்த நிலையில் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வி.சி.க. வேட்பாளர் துரை. ரவிக்குமாரை ஆதரித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி பரப்புரை செய்தனர்.

இதில் பேசிய திருமாவளவன் தமிழ்நாட்டில் தி.மு.க., அ.தி.மு.க. இடையில் தான் எப்பொழுதும் தேர்தல் போட்டி இருக்கும் ஆனால் தற்போது அ.தி.மு.க. தன்னுடைய வலுவை இழந்துள்ளது, இதனால் தி.மு.க.வை எதிர்க்கும் தகுதியை அ.தி.மு.க. இழந்துள்ளது, இதனால் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும், தமிழ்நாட்டில் பா.ம.க. உடன் பா.ஜ.க. கூட்டணி அமைத்துள்ளது ஒரு பொருட்டல்ல மத்திய ஆட்சியில் உள்ள பா.ஜ.க.வை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் பத்து ஆண்டுகள் பா.ஜ.க. ஆட்சிக்காலத்தில் இந்தியா வளரவில்லை மாறாக நரேந்திர மோடி அமித்ஷா இவர்களின் நெருங்கிய கூட்டாளி களான அதானி - அம்பானி ஆகிய இருவரும் அதிக அளவில் வளர்ந்துள்ளனர்.

இருவரும் உலக அளவில் பணக்காரர்கள் பட்டியலில் 10 இடங்களில் உள்ளனர், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு உடந்தையாகவும் அப்பாவி பொதுமக்களுக்கு விரோதியாகவும் பா.ஜ.க. செயல்பட்டு வருகிறது, பொது மேடையில் தமிழக ஆளுநர் ரவியின் செயலை கண்டித்ததால் பொன்முடி தன்னுடைய அமைச்சர் பதவியை இழந்தார். ஆனால் பொன்முடி சிறிதும் அசராமல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு மீண்டும் அமைச்சராகி உள்ளார்.

இந்தியா கூட்டணி உருவாக முக்கிய காரணமாக இருந்தவர் முதல்வர் ஸ்டாலின் இந்திய அரசியலில் தமிழ்நாட்டில் முதல்வர் ஸ்டாலின் முக்கிய இடத்தை பிடித்துள்ளார், தமிழ்நாட்டை தாண்டி தேசிய அரசியலின் திசையை தீர்மானிக்கும் சக்தியாக முதல்வர் ஸ்டாலின் உருவெடுத்துள்ளார், வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகிய 40 இடங்களிலும் மகத்தான வெற்றி பெறும் என்றார்.

இந்நிகழ்வில் உயர் கல்வித் துறை அமைச்சர் க. பொன்முடி, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.உதய சூரியன் எம்.எல்.ஏ, உளுந்தூர் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக் கண்ணன் ஆகியோர்கள் உடன் இருந்தனர்,மேலும் ஒன்றிய கழகச் செயலாளர்கள் U.S.வைத்திய நாதன், G.R.வசந்தவேல், ராஜவேல்,K.V.முருகன், சந்திர சேகரன்,நகர கழக செயலாளர் த. டேனியல்ராஜ் மற்றும் இந்தியா கூட்டணி கட்சியின் மாவட்ட செயலாளர்கள்,ஒன்றிய, நகர நிர்வாகிகள், பொது மக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊர்களில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | பிரச்சாரம் செய்யும் ஊர் |
|---|---|---|
| 02-04-2024 | - | திருவள்ளூர் |
| 03-04-2024 | - | திருத்தணி |
| 04-04-2024 | - | பூவிருந்தவல்லி |
| 05-04-2024 | - | அம்பத்தூர் |
| 06-04-2024 | - | இராணிப்பேட்டை |
| 07-04-2024 | - | காஞ்சிபுரம் |
| 09-04-2024 | - | வேலூர் |
| 10-04-2024 | - | மீஞ்சூர் |
| 11-04-2024 | - | செய்யார் |

மேற்குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், இவரது பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## திருவாரூர் தொகுதி 'இந்தியா' கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

### பூண்டிகே.கலைவாணன் - உ.மதிவாணன் - நாகை.அசோகன் பங்கேற்பு!

திருவாரூர்,மார்ச் 31.

திருவாரூர் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,எம்.செல்வராஜ் எம்.பி., முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன்,நாகை. அசோகன் , ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் தேவா, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள்,வேட்பாளர் வை.செல்வராஜ், நகர்மன்ற தலைவர்கள் புவனப்ரியா செந்தில், பாத்திமா பஷீரா உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றினர்.

நாகை நாடாளுமன்ற தொகுதிக் குட்பட்ட திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கான செயல்வீரர்கள் கூட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.கூட்டத்திற்கு தலைமை ஏற்று பேசிய மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. " சனாதன கோட்பாடுகளை நாங்கள் ஏற்பதில் எங்களுக்கு பிரச்சினை எதுவும் இல்லை , ஆனால் 18 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க ஒப்புக்கொண்டும், பஞ்சமர்கள் பேருந்தில் பயணிக்க அனுமதி இல்லை என்பதை ஒப்புக்கொண்டும், ஒரு குறிப்பிட்ட பிரிவினரை தொட்டாலே தீட்டு எனவும் , இன்னொரு குறிப்பிட்ட பிரிவினரை பார்த்தாலே தீட்டு என்பதையும் பா.ஜ.க. வைச் சேர்ந்த தமிழிசை சவுந்தர ராஜன், எல்.முருகன் போன்றவர்கள் ஒப்புக் கொண்டால் எங்களுக்கு சனாதனத்தை ஏற்றுக்கொள்வதில் சிரமமில்லை. பஞ்சமர்கள் பேருந்தில் பயணிக்க அனுமதி இல்லை என்பதை மாற்றி பேருந்தில் இலவசமாகவே பயணிக்கலாம் என சனாதனத்தை நடைமுறை வாழ்க்கையில் ஒழித்து காட்டியது திராவிட நாயகர் தளபதி அவர்களுடைய அரசு என சனாதனம் குறித்து பேசுபவர்களிடம் சொல்லி வாக்கு சேகரியுங்கள் என குறிப்பிட்டு உரையாற்றினார்.

பின்னர் திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேர்தல் அலுவலகத்தை கமலாலயம் வடகரையில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். அப்போதுவேட்பாளர் வை.செல்வராஜ்எம்.செல்வராஜ் எம்.பி., முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை.அசோகன்,நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், தேர்தல் பொறுப்பாளர் துரை.கி.சரவணன், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் தேவா, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள் வேட்பாளர் வை. செல்வராஜ், நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மதிமாறன் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்- 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி. மதிமாறன். இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 02.04.2024 | - | மதுரை |
| 03.04.2024 | - | தேனி |
| 04.04.2024 | - | திண்டுக்கல் |
| 05.04.2024 | - | கரூர் |
| 06.04.2024 | - | பொள்ளாச்சி |
| 07-04-2024 | - | கோயம்புத்தூர் |
| 08-04-2024 | - | நீலகிரி |
| 09-04-2024 | - | திருப்பூர் |
| 10-04-2024 | - | சேலம் |
| 11-04-2024 | - | நாமக்கல் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாஞ்சில் சம்பத் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, நாஞ்சில் சம்பத் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03.04.2024 | - | திருநெல்வேலி |
| 04.04.2024 | - | விருதுநகர் |
| 05.04.2024 | - | தென்காசி |
| 06.04.2024 | - | தூத்துக்குடி |
| 07.04.2024 | - | இராமநாதபுரம் |
| 08-04-2024 | - | மதுரை |
| 09-04-2024 | - | சேலம் |
| 10-04-2024 | - | கள்ளக்குறிச்சி |
| 11-04-2024 | - | கடலூர் |
| 12-04-2024 | - | பொள்ளாச்சி |
| 13-04-2024 | - | திருப்பூர் |
| 14-04-2024 | - | கோயம்புத்தூர் |
| 15-04-2024 | - | நீலகிரி |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து போஸ் வெங்கட் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, போஸ் வெங்கட் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு: -

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01.04.2024 | - | சேலம் |
| 02.04.2024 | - | நாமக்கல் |
| 03.04.2024 | - | பெரம்பலூர் |
| 04.04.2024 | - | திருச்சி |
| 05.04.2024 | - | கோயம்புத்தூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஒய்.இன்பராஜ், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29-03-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.